**<u>In the Court of the  District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 26/2019** **Date:25.04.2025**

**(P.W.1)- ராஜா**
**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. புதிய புல எண் 60/13-ல் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 24 சென்ட் ஆகும், அதில் மொத்தம் 26 சென்ட் 2 சென்ட் வழிப்பாதையாகும். மேற்படி 60/13 சொத்தில் மொத்தம் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 2 வீடுகள் உள்ளது. கணபதிக்கு ஒரு வீடும், சுந்தரத்திற்கு ஒரு வீடுமாகும். வழக்கின் வாதிக்கு பாத்தியப்பட்ட வீட்டினுடைய சிட்டா, அனுபவச் சான்றிதழ் பார்வையிட்டேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி ஆவணங்களை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி வாதியின் வீட்டிற்குள்ள எல்லை கற்களை பார்வையிட்டுள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அவ்வாற எல்லை கற்கள் இல்லை என்றால் சரியல்ல. வாதி மற்றும் வாதியின் அப்பா வீட்டிற்கு உள்ள மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இரண்டு வீட்டிற்கும் ஒரே மின் இணைப்பு என்றால் சரியல்ல, தனித்தனியே மின் இணைப்பு உள்ளது. ஒரே மின்இணைப்பு என்றாலும் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. என்னுடைய மனைவி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேலை செய்யும் செல்வாக்கை பயன்படுத்தி மேற்படி வாதியின் வீட்டிற்கு தனியாக வீட்டுக்கரம் போட்டுக்கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையர் நில அளவையருடன் வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஆணையர் மற்றும் நில அளவையர் நிலத்தை பார்வையிட்டு அளந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதியில் நீதிமன்ற ஆணையர் பார்வையிட வந்தார் என்றால் தேதி தெரியாது, சுமார் இரண்டு வருடம் இருக்கும். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்ற விவரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**(P.W.1)- ராஜா**

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

3. நீதிமன்ற ஆணையர் வழக்கு பட்டிகை சொத்தை பார்வையிட்டதில் 8 லிங்ஸ் இடத்தை வாதி மற்றும் வாதியின் தகப்பனாரும் ஆக்கிரமித்துள்ளதால் அறிக்கை ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வேறு நீதிமன்ற ஆணையரை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால் எடுக்கவில்லை. சர்வே எண் 60/13 ஏ-வில் ஏறபட்ட உட்பிரிவை எதிர்த்து இந்த பிரதிவாதி தக்கலை கோட்டாச்சியர் அலுவலகத்தில் 13.08.2012-ஆம் தேதி தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டு உட்பிரிவு ரத்து செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உத்தரவை எதிர்த்து DRO அலுவலகத்தில் வாதியின் தகப்பனார் சீராய்வு மனு தாக்கல் செய்து மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கோட்டாச்சியரின் உத்தரவு அமல்படுத்தவேண்டி பிரதிவாதியால் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P. No.(MD). 4068/2018 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு அதில் 5-ஆம் பிரதிவாதியாக வாதியின் தகப்பனார் கட்சி சேர்க்கப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு பிரதிவாதியின் இடத்தை அளந்து கொடுப்பதற்கு உத்தரவிடப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு மனு ஏதும் அனுமதிக்கப்படவில்லை.

4. நான் மேற்படி மனுவிலிருந்தும் பிரதிவாதியின் வழிப்பாதையை ஆக்கிரமித்து காம்பவுன்ட் சுவர் கட்டியதிலிருந்து தப்பிப்பதற்காகவும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரின் சொத்தை அவரின் மனைவிக்கு 07.11.2008 அன்றே ஆவண எண்-2218/2008 மூலம் இஷ்டதானம் எழுதிகொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதனால்தான் இவ்வழக்கில் பிரதிவாதியை தவறுதலாக கட்சி சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரவாதி 3 பெண் பிள்ளைகளைகளுடன் கஷ்ட ஜீவனம் செய்து வருவதால் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் பிரதிவாதி வாதியின் சொத்தை விலைக்கு வாங்குவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

**(P.W.1)- ராஜா**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

5. வாதியின் மனைவி, குழந்தைகள் சிங்கப்பூரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் வசதியாக உள்ளார்கள் என்றால் சரியல்ல. எனவே, பிரதிவாதியை கஷ்டபடுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

(ஒப்பம்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்.